பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 01 2026 WEDNESDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கூட்டுக் கூட்டத்தில் இன்று உரையாற்றினார்.
   **மத்திய அரசின் நடவடிக்கைகள் காரணமாக உணவு உற்பத்தியில் சாதனை படைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.
   **வறுமையின் பிடியிலிருந்து 25 கோடி பேர் மீட்கப்பட்டிருப்பதாகவும், தேசிய பாதுகாப்பு பயிற்சி மையத்தில் முதன்முறையாக மகளிர் பயிற்சி பெற்றுள்ளதாகவும் குடியரசுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

2. மகாராஷ்டிராவின் துணை முதலமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அணித் தலைவருமான திரு. அஜித் பவார், இன்று காலை நேரிட்ட விமான விபத்தில் உயிரிழந்தார்.
   *** அவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

3. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isha Barua காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய அரசின் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதன் காரணமாக, விவசாயம், தொழில்நுட்பம், மாற்று எரிசக்தி, உள்கட்டமைப்பு

போன்றவற்றில் வேகமான வளர்ச்சி காணப்பட்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்புக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், உலக அளவில் பொருளாதார நெருக்கடி நிலவினாலும், இந்தியாவின் பொருளாதாரம் வலுவாக உள்ளதாக கூறினார்.

உணவு உற்பத்தியில் சாதனை படைக்கப்பட்டிருப்பதாகவும், மாற்று எரிசக்தி திறன் மேம்பாட்டு திட்டங்கள் மூலம் 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட், மாற்று எரிசக்தியை உற்பத்தி செய்வதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் நெடுந்தூரப் பகுதிகளை இணைக்கும் வகையில், 70 ஆயிரத்து 700 கிலோமீட்டர் தொலைவிலான தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இது மாபெரும் சாதனை என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து துறைகளிலும், விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், 2025ஆம் ஆண்டில் 2 கோடிக்கு மேல் இருசக்கர வாகனப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் உடனான வர்த்தக ஒப்பந்தம் மூலம் பல முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ ரயில் போக்குவரத்து கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் பெருமிதம் தெரிவித்தார்.

தமிழகத்தின், ராமேஸ்வரம் – பாம்பனில் புதிய ரயில் பாலம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி பேர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அணுமின் உற்பத்தியை பெருக்குவதற்கான புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்தின் மூலம், மக்களின் ஒரு லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருப்பதாக திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான செல்ஃபோன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாமில், செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்கள் அகல ரயில்பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

*பாபாசாகேப் அம்பேத்கரின் கொள்கையான சமத்துவம் மற்றும் சமூகநீதியின் அடிப்படையில் மத்திய அரசின் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக பாகுபாடு இன்றி மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், 95 கோடி இந்தியர்கள் பயனடைந்திருப்பதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.*

*நாட்டின், ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள், பாகுபாடின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாக திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.*

*பிஜேபி தலைமையிலான மத்திய அரசு, பதவியேற்ற 2014ஆம் ஆண்டு முதல், அனைவருக்குமான வளர்ச்சி என்ற அடிப்படையில் இயங்கி வருவதாகவும், 25 கோடி மக்கள் சமூகநலத் திட்டங்களால் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*நூற்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில், நக்ஸலைட்டுகள், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, அமைதி நிலவுவதாக அவர் கூறினார்.*

*லட்சாதிபதி சகோதரி திட்டத்தின் கீழ், லட்சக்கணக்கான மகளிர் பயன்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

அரிய தாதுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய படைகளின் வீரம் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு, தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

தேசிய பாதுகாப்பு அகாடமியில், முதன்முதலாக பெண்கள் பயிற்சி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட குடியரசுத்தலைவர், மத்திய அரசின் முற்போக்கான சிந்தனைகளால், பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மகளிர் சக்தியை வலுப்படுத்துவதற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அனைத்து துறைகளிலும் அவர்கள் பங்கேற்கும் விதமாக, கொள்கை செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் அடிப்படையில், கிராமப்புற மக்களுக்கு 125 நாட்கள் வேலை உறுதி செய்யப்பட்டிருப்பதாக திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு குரல் எழுப்பினர்.

*நாடாளுமன்றத்தில் நடப்பு நிதியாண்டின் பொருளாதார ஆய்வறிக்கை, நாளை தாக்கல் செய்யப்படவுள்ளது.*

*மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், பிப்ரவரி 1ஆம் தேதியன்று 2026-27ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளார்.*

*நாடாளுமன்ற பட்ஜெட் முதல்கட்ட கூட்டத்தொடர், இன்று முதல் அடுத்த மாதம் 13ஆம் தேதி வரையிலும், அடுத்த கட்டமாக மார்ச் 9ஆம் தேதி முதல் ஏப்ரல் 2ஆம் தேதி வரையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*மகாராஷ்டிராவின் துணை முதலமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அணித் தலைவருமான திரு. அஜித் பவார், இன்று காலை நேரிட்ட விமான விபத்தில் உயிரிழந்தார்.*

*அவருடன் பயணித்த 5 பேரும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*விமானம் விழுந்த இடத்தில் தீப்பற்றி எரிந்ததாக நேரில் பார்த்த அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.*

*அஜித் பவார் இன்று மும்பையிலிருந்து, பாராமதி-க்குச் சென்ற போது விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.*

மஹாராஷ்ட்ராவில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதாக அவர் சென்றதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து உடல்களை மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

மஹாராஷ்ட்ரா அரசியலில் அசைக்கமுடியாத தலைவராக விளங்கிய அஜித் பவார், அம்மாநில நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்தார்.

இதனிடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த விபத்து குறித்து மஹாராஷ்ட்ர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னாவிஸிடம் கேட்டறிந்தார்.

>>>>>><<<<<<

அஜித் பவாரின் மறைவை ஒட்டி, குடியரசுத்தலைவர், பிரதமர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மஹாராஷ்ட்ர மாநிலத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர் அஜித் பவார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், அஜித் பவாரின் மறைவு, இந்திய அரசியலுக்கு பேரிழப்பு என்று கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ர மக்களுக்காக சேவையாற்றியவர் அஜித் பவார் என்று குறிப்பிட்டுள்ள பிரதமர், ஏழைகளின் நலனுக்காக பாடுபட்டதாக தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் பஞ்சாப் கேசரி லாலா லஜ்பத் ராயின் பிறந்த தினத்தை ஒட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், சுதந்திரப் போராட்டத்தில் அவரது துணிச்சல்மிக்க பங்களிப்பு, நாட்டின் இளைஞர்களை வழிநடத்தும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டின் சுதந்திரத்திற்காக லாலா லஜ்பத் ராயின் தியாகம் அனைவருக்கும் ஊக்கமளிப்பதாக கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், லாலா லஜ்பத் ராயின் புரட்சி, பகத்சிங் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உத்வேகம் அளித்ததாக தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வந்தேமாதரம் பாடல் இயற்றப்பட்டதன் 150வது ஆண்டு விழாவை ஒட்டி, சைக்கிள் பேரணியை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், புதுதில்லியில் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மத்திய தொழிலக பாதுகாப்பு படைப் பிரிவின் மூலம் இன்று தொடங்கிய இந்தப் பேரணி, அடுத்த மாதம் 22ஆம் தேதி வரை, நாட்டின் பல பகுதிகளுக்குச் செல்கிறது.

>>>>>><<<<<<

புதிய மருந்து வகைகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளுக்கான சட்டத் திருத்தத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதற்கான நெறிமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மருந்து பொருட்களுக்கான அனுமதி பெறுதல், புதிய மருந்து வகைகளை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்

உள்ளிட்டவற்றுக்கான நெறிமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மருந்துப் பொருட்கள் உற்பத்தி பெருமளவில் வளர்ச்சி பெறும் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

வர்த்தகம் அல்லாத மருந்துப் பொருட்கள் உற்பத்திக்கான உரிமம் கிடைப்பதற்கு 90 நாட்களே போதுமானது என்ற நிலை தற்போது மாறியுள்ளதாகவும், 45 நாட்களுக்குள் உரிமங்களை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் இஷா பருவா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் மாள்விகா பன்சூடை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத்தும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

விசாகபட்டிணத்தில் இப்போட்டி இரவு 7மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<